தனித்தனியாக "ஹோம்" வைத்து நடத்தப்படுகிறது. மொத்தம் எத்தனை பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்பது இப்பொழுது கணக்கெடுக்கவில்லை.

SRI S. M. ANNAMALAI: பிச்சைக்காரர்கள் அதிகமாவதற்குக் காரணமென்ன? அந்தக் காரணத்தைச் சர்க்கார் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பிச்சைக்காரர்கள் அதிகம் ஆவதற்கு வறுமை மட்டும் காரணமல்ல என்று சர்க்காருக்குத் தெரியும்.

SRI V. SUBBIAH: இந்தவிதப் பிச்சைக்காரர்களில் நோயுற்றவர்கள், குஷ்ட ரோகம் போன்ற வியாதியுடையவர்கள், அங்கஹீனர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று தனிக் காலனி அமைத்து அவர்களைச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்க ஏதாவது அரசாங்கத்திற்கு திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பிச்சைக்காரர்கள் நிவாரணத்தைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்போது இந்த வேலையும் அரசாங்கத்தின் பிரத்தியேகமான பரிசீலனையில் இருக்கிறது. நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

Land erosion

*272 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லா, கோபிசெட்டிப்பாளையம் தாலூகா, தாளவாடி மலைப் பிரதேசத்திலே மண் அரிப்புத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு?

(ஆ) அவ்விடத்தில் எத்தனை ஏக்கரா நிலங்கள் மண் அரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன?

(இ) 1960–61-ம் வருடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மூலமாக எத்தனை ஏக்கரா நிலங்களிலே மண் அரிப்புத் திட்டம் அமுலாக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Nil, for the year 1960–61.

(*b*) Not available.

(*c*) Nil, Sir.

Water-diviners

*277 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீரூற்றுகளைக் கண்டுபிடித்து விவசாயத்துக்கான கிணறுகளைத் தோண்டுவதற்காக அரசாங்க மூலமாக "நீரூற்றுக் கண்டுபிடிக்கும் நிபுணர்கள்" நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?